# இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்.

**<u>அ.வ.எண்.</u>** : **<u>193/2021</u>**

**<u>பி. சா.</u>** **<u>1</u>**

**பெயர்** : ராமசாமி

-----------------------------------------------------------

**நாள்: 16.09.2025**

**சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம்: 12.04 pm to 12.13 pm**

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு மறு விசாரணை தொடர்ச்சி</u>:**

08.06.1965 ம் தேதியிட் கிரய பத்திரம் அசல் **பி.சா.ஆ.10.** 22.07.1966 ம் தேதியிட்ட மறு கிரய உடன்படிக்கை பத்திரம் பதிவு அலுவலக நகல் **பி.சா.ஆ.11** ஆகியவற்றை எனது தரப்பு சான்றாஆவணமாக குறியீடு செய்ய வேண்டிக்கொள்கிறேன்.

**<u>குறுக்கு விசாரணை:</u>**

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள 2 ஆவணங்களை படித்துப் பார்த்துள்ளேன். அதில் பி.சா.ஆ.10 கிரய பத்திரம் என் அப்பா கிரயம் வாங்கியதாகும். என் அப்பாவிற்கு கிரயம் கொடுத்த கொண்டத்துக்கவுண்டர் வேறொரு நபருக்கு மறு கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பி.சா.ஆ.11 ன் படி மாரப்பக்கவுண்டர் என் அம்மாவுக்கு மறு கிரய மேடோவர் பத்திரம் தான் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த மேடோவர் பத்திரத்திரபடி என் அம்மா கிரயம் வாங்கினாரா என்றால் இல்லை,

என் அப்பா பெயரில் உள்ளதால் வாங்கவில்லை. அதனால் பி.சா.ஆ.11ன் படி என் அம்மாவுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். என் அப்பா எனக்கும் என் தம்பிக்கும் செட்டில்மெண்ட் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான், எ்ன் தங்கச்சிக்கும் கொடுத்துள்ளார். என் தங்கச்சிக்கு கொடுத்தற்கு ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பிரமாண வாக்குமூலத்தில் விளம்புகை கோர வேண்டும் என்று கூறி இருந்தேன் என்ன விளம்புகை என்று எனக்கு தெரியாது. என் மகளுக்கு சொத்தில் பாகம் கொடுக்கக்கூடாது என்பதற்கு உண்மைக்கு மாறான சங்கதிகளை கூறி உள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தவறான சங்கதிகளை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation as deposed by the witness in Open Court and acknowledged by him / her to be correct.

SRIDHAR CHINNASAMY

Digitally signed by SRIDHAR CHINNASAMY
Date: 2025.09.16 13:13:23 +0530

II Additional District and Sessions Judge,
Tiruppur.